பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி வியாழன் வெளியீடு.

போர் 1 பொள்ளாச்சி. 13—9—51. விலை அரையணா. 6-பக்கம். வெற்றி 31

சட்டசபைக்கு யார் வேண்டும்.

ஏழை ஊழியர்களுக்கு இடமில்லையா? பணக்காரர்கள் தான் லாயக்கா?

கோவை ஜில்லாவில் சட்டசபைத்தேர்தலுக்கு காங்கிரஸின் பெயரால் பணக்காரர்கள்தான் நிற்கப்போவதாகத் தெரிகிறது. ஏழைஊழியர்களுக்கு நாட்டின் விடுதலைக்காக அல்லும் பகலும் உழைத்து உழைத்து உருக்குலைந்துபோன உத்தமர்களுக்கு இடம்கொடுக்கப் போவதாகத் தெரியவில்லை பணத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும் சட்டசபையை எட்டிப்பிடிக்கப்பார்க்கின்றனர். விடுதலைப் பேரில் விரலைக்கூட ஆட்டாதவர்கள், புனிதமான காங்கிரஸின் பெயரால் பதவிக்கு வருவதென்றால் அவர்களால் ஏழைகளுக்கு, பாட்டாளிவர்க்கத்திற்கு என்ன நன்மை உண்டாகும். தங்களுக்கு இருக்கும் பணச்செருக்கால் ஊழியர்களை உதாசீனப்படுத்துகின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் ஊழியர்கள் கட்டுப்பாடாக இருந்து தங்களுக்குள் கருத்து வேறுபாடின்றி, சிலரையாவது தேர்ந்தெடுக்க தேர்தல போர்டாருக்கு சிபார்சு செய்யவேண்டும்.

• பணக்காரர்களாயிருந்தாலும் நாட்டின் விடுதலைப்போரில் பங்குகொண்டவர்கள் ஏழைகள்பால் அன்பும், தொடர்பும் உள்ளவர்கள். பாட்டாளி வர்க்கத்தின், விவசாயி – தொழிலாளி நலனில் அக்கரை உள்ளவர்கள். தான் பணக்காரன் மற்றவர்கள் நமக்கு அடிமை என்ற எண்ணம் இல்லாதவர்கள் காங்கிரசின் நலனில் அக்கரை உள்ளவர்கள். காங்கிரசின் தீர்மானங்களை அமுல் நடத்த ஆர்வம் உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால்பரவாயில்லை அவர்களை ஆதரிக்கவும் ஊழியர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஜில்லாவில் கூடுமானவரை ஊழியர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல்போர்டார் முயற்சிக்கவேண்டுகிறோம். (எஸ். வி.)

ஸ்ரீ பழனிச்சாமி பரவாயில்லை.

கிணத்துக்கடவு தொகுதிக்கு ஸ்ரீ எஸ் எம். பழனிசாமி எம். எல். ஏ யாக வந்தால் நலமாக இருக்கும். அந்தத்தொகுதியில் இவருக்கு நல்லதொடர்பும், விவசாயிகளின் நலனில் அக்கரையும், எல்லோருடனும் நெருங்கிப்பழகும் சுபாவமும், ஏழைகள்பால் அன்பும் உள்ளவர். பள்ளியில் படிக்கும்போதே கதர், காங்கிரஸ் அபிமானம் உள்ளவர் இப்போது சிறந்த உண்மையான நேர்மை வாய்ந்த ஊழியர்களில் ஒருவர். இவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுகிறேன். (முத்துசாமி)

ஸ்ரீ வி. கே. பி. க்கு பகிரங்ககடிதம்.

தன்னலமற்ற தலைவ,

எனது அன்புள்ளவணக்கத்தை தா... களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்... கிறேன். நான் பால்யம்முதல் அரசியலில் ஈடுபட்டு, அடிபட்டு, சிறைசென்று தற்... சமயம் எனது ஊரில் பத்திரங்கள் எழுதி... காலட்சேபம்செய்துவருகிறேன் தாங்க... இந்த நாட்டிற்காக செய்தபணியும் ம... வர்கள் செய்ததும் என்போன்ற ஊழிய... களுக்கு நன்குதெரியும் நாடு சுதந்திர... அடைந்து காங்கிரஸ் ஆட்சிக்குவந்தபின் புல்லுருவிகள் எல்லாம் காங்கிரஸ் ஸ்தாப... னத்தில் தங்கள் சுயநலத்திற்காக சேர்ந்து... என்போன்ற ஊழியர்கள் எல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் போய்விட்டது. (காரணம் நீங்கள் தான் என்று தைரியமாகச் சொல்லு... கிறேன். நீங்கள் சுயநலமிகளின் பேரில்கொண்ட அன்பும் பெருந்தன்மையும்தான் இன்று நமது தாலூக்காவையே பாதிக்கிறது.) நிற்க அடுத்த பொதுத்தேர்தலில் சுய நலமிகள் சுருங்கச்சொன்னால் அன்று அன்னிய ஆட்சிக்கு ஆதரவாக இருந்தவர்கள் காங்கிரஸ் தேர்த... லில் நிற்பதாகவும், தாங்கள் நிற்கப்போவதில்லையென்றும் வதந்திகள் உலாவுகின்றன. இந்ததேசத்தின் மீது ஆணையிட்டு சொல்லுகிறேன் நீங்கள் இதுவரைசெய்தது சேவையல்ல இனிமேல்தான் இத்தாலூக்காவிற்கு என்? இம்மாகாணத்திற்கே உங்கள் சேவை மிகவும் அவசியம். முதல்வேலைசுயநலமிகளை முதலாளிகளை, இந்நாட்டின் துரோகிகளை ஒழித்துக்கட்டுவதும், என்போன்ற ஊழியர்களுக்கு உற்சாகம் தருவதும், காந்திஜிகண்ட கனவை நனவாக்குவது ஆகும். ஆகையால் தாங்கள் எவ்விதசிந்தனையும் செய்யாமல் பொதுத்தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக நின்று இணையிலா வெற்றிபெற்று இந்நாட்டி... ற்கி, ஏழைவிவசாயிகளுக்கு, தொழிலாளிகளுக்கு ஆவனசெய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தேர்தல் போர்டாரையும்கவனம்செலுத்தும்படி காங்கிரஸ்ஊழியன் என்றமுறையில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வி. திருமலைசாமி,
காங்கிரஸ் ஊழியன்,
மலையாண்டிபட்டணம்.

10-9-51.

செல்வாக்கு மிகுந்த தமிழ் வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 13—9—51. வியாழன்.

ஸ்ரீ தாண்டன்பாபுவின் பெருந்தன்மை.

காங்கிரஸ் அக்கிராசனர் தாண்டன்பாபு தமது பதவியை இராஜீநாமா செய்துவிட்டார். எவ்வளவு பெரியவர்களாயினும்சரி காங்கிரஸ் சட்டதிட்டங்களின் படிதான் நடப்பேன் என்று அழுத்தமாக சொல்லிவிட்டார். லட்சியவாதி தாண்டன்பாபு லட்சியத்திற்காக எதையும் தியாகம்செய்யக்கூடியர். இன்று அக்கிராசனர் பதவியைக்கூட லட்சியத்திற்காக தியாகம்செய்துவிட்டார். இந்த நிலைமைதான் 1939 ல் நேத்தாஜி போஸிற்கு ஏற்பட்டது. அப்போது அவர் பதவியை இராஜீனாமாசெய்துவிட்டு நாட்டின் விடுதலைக்காக வெளிநாடுசென்றுபாடுபட்டார். தாண்டன்பாபு காங்கிரஸிலிருந்துகொண்டே காங்கிரஸிற்காக சேவை செய்யப்போகிறார். இப்போது நேருஜி பொறுப்பேற்றிருப்பது கண்டுநாம்மகிழ்வடைகிறோம். சர்க்காரை நடத்துபவரே அதன்கக்ஷிக்கும் தலைவராயிருப்பது அரிய காரியம்தான். நேருஜியின் பொறுப்பு மகத்தானது. தாண்டன்பாபு கூறியதுபோல் அவர் இந்நாட்டின் விலைமதிக்கமுடியாத மாணிக்கம். அவரே சர்க்காரையும், காங்கிரசையும் நடத்திச்செல்கிறார் என்றால், இந்த நாட்டின் ஏழை எளியமக்களின் வயிற்றில் பால் வாற்றதுபோலாகும்.

நேருஜியின் தலைமையினால்தான் நாட்டில் ஏதேனும் பொருளாதார விடுதலைகிடைக்குமென்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதைச்செய்யக்கூடிய பொதுத்தேர்தல்களும் வரப்போகிறது. இந்த அரிய சந்தர்ப்பத்தில் காங்கிரஸை நடத்திச்செல்ல நேருஜி முன்வந்திருப்பதை எல்லோரும் வரவேற்கின்றனர். நேருஜியின் பொறுப்பும் கடமையும்மிக அதிகமாகிறது. அவர் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டியும் இருக்கிறது. இந்நாட்டிலுள்ள முதலாளித்துப் பத்திரிகைகள் எல்லாம் ஒரே முகமாகநேருவை ஆதரிக்கிறது. முதலாளித்துவப் பணக்காரர்கள் நேருவை ஆதரிக்கின்றனர். அவர்கள் நேரு சர்க்காரை உபயோகித்துக்கொள்ளப்பார்க்கின்றனர். இவர்கள் எண்ணத்தில்மண்விழும் அதில் சந்தேகமில்லை. நேருவின் தலைமையில் காங்கிரஸிலுள்ள பணமூட்டைகள், சந்தர்ப்பவாதிகள், பதவிப்பித்தர்கள், அரசியல் சூதாடிகள் விரட்டப்படுவார்கள் என்று நாமும் எதிர்பார்க்கிறோம். நெருக்கடியைத்தீர்க்க சகலவிதத்திலும் உதவிபுரிந்த தாண்டன்பாபுவின் பெருந்தன்மையைப்பாராட்டுகிறோம்.

"குருவி ஜோசியம்"

கோவை பிரமுகருக்கு அ. இ. கா பொதுக்காரியதரிசி பதவிகிடைக்கப்போகிறது. அவர் விமானத்தில் பறக்கிறார். தமிழ்நாடு தலைவர்கூட சிபார்சுசெய்கிறார். என்று கோவை காங்கிரஸ் பிரமுகரின் பக்கவாத்தியங்களும் ஓரிரு பத்திரிகைகளும் முழங்கின. நமது குருவிக்கு ஒரே ஆச்சரியமாய்ப்போய்விட்டது. குருவியிடம் பல காங்கிரஸ்காரர்கள் வந்து ஜோசியம் கேட்கவும் ஆரம்பித்து விட்டார்கள். அப்போது குருவிசொன்னஜோசியம் கீழ்கண்டவாறு:—

இதெல்லாம் பிரச்சாரத் தந்திரம். அவர் எம். எல். ஏ யாக வரவேண்டும். அதற்கு பெரிய எதிர்ப்பு இருக்கிறது ஆகவே மேலிடத்து ஆதரவு, செல்வாக்கு இருப்பதாகக்காட்டிக்கொண்டால், எதிர்ப்புக்குறைந்துவிடும் எப்படியும் இவர் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார் என்று மற்றவர்கள் மனுப்போடமாட்டார்கள் இதை ஊதுகாமாலையே ஒழிய ஆளை பார்த்து ஏமாந்துவிடவேண்டாம் என்று குருவி சொல்லிற்று எனவே குருவியும் டெல்லிக்குப் பறந்தது. நேருஜிக்குப்பெரிய தலைவலியாயிருந்தது. குருவிசென்றசமயம் காங்கிரஸ் அக்கிராசனர் பதவி ஒரு கையிலும், ஏராமான தந்திகள் ஒருகையிலுமாக நேருஜி காட்சியளித்தார்

கோவை பிரமுகருக்கு நீங்கள் பொதுக்காரியதரிசி பதவி கொடுக்கப்போகிறீர்களாம் அதுகூடவே கூடாது. அவர் காங்கிரஸின் செல்வாக்கை உபயோகப்படுத்திக்கொண்டு பெரிய வக்கீல் என்றுபெயரெடுத்தவர். கள்ளமார்க்கட் வழக்குகளுக்கும், கொள்ளை, கொலை வழக்குகளுக்கும் வக்காலத்து வாங்குபவர். பணமூட்டைகளின் கையாள். இவர் காங்கிரஸின் பொதுக்காரியதரிசியானால் காங்கிரஸை பணமூட்டைகளிடமும், கள்ளமார்க்கட்வாலாக்களிடமும், மில்முதலாளிடமும் ஒப்படைத்ததுபோலாகும். இவருடைய கதர் ஜிப்பா மகிமைதான் அதிகாரிகளைக்கூட விரட்டுகிறது. தமிழ்நாட்டுத்தலைவர்களில் பலரை ஒருவரை ஒருவர் போட்டிபோட தட்டிவிட்டுக்கொண்டு பதவியைஎட்டிப் பிடிக்கப்பார்க்கும் பேர்வழி இவர் என்று பலபல தந்திகள். இதெல்லாம்இவர்காதுக்கும்போயிருக்கும் என்றும்இஞ்சி தின்ற ஆசாமி மாதிரி டெல்லியைவிட்டுத்திரும்புகிறார்கள் என்றும் குருவி ஜோசியம் சொல்லுகிறது.

இப்போது இவரைப்பற்றி நேருஜி நன்குணர்ந்துகொண்டதால் அடுத்தாற்போல் மாகாண மந்திரிசபையில் கூட இவர் வரமுடியாது என்று இப்போதே நமது குருவிஜோசியம்சொல்கிறது. அதுமட்டுமல்ல இவர் மிகவும் மண்டைக்கனம் உள்ளவர். யாரையும் அலட்சியம் செய்யும் மனப்பான்மை உள்ளவர். இவர் எங்கள் பிர்க்காவின் எம் எல். ஏ. யாக வரக்கூடாதுஎன்றுபலத்த எதிர்ப்பு இருக்கிறதாம். இவரைக்காங்கிரஸின் பெயரால் நிறுத்தினாலும் இவருக்கு தோல்வி நிச்சயமென்று தேர்தல்போர்டாருக்கே குருவி ஜோசியம் சொல்கிறது. கோவை பிரமுகருக்குபொதுக்காரியதரிசியாம் என்று வாய் தவறுதலாக நமது குருவி முணங்கியபோது உனக்குமண்டையில் மூளையிருக்கிறதா என்றபதில் கிடைத்ததாம். உடனே குருவி பறந்துவந்து ஆபீஸ் சேர்ந்தது. அடுத்தவாரம் குருவி எங்கு செல்கிறதோதெரியாது

குறிப்பு.

சட்டசபைக்கு யார் வேண்டும்? என்பது குறித்து ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன அவைகளை அப்படியே "வாசி"யில் பிரசுரிக்க இடம் இல்லை. எனவே அவைகளின் சுருக்கத்தை அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

உதவி ஆசிரியர்.

'லக்க ஜோசியம்'

(14-9-51 முதல் 20-9-51 வரை) கே. பி. வி

1	2	3	4	5	6	7	8	9
A	B	C	D	E	F	G	H	I
J	K	L	M	N	O	P	Q	R
S	T	U	V	W	X	Y	Z	

K. RAMAN

2 9 1 4 1 5, 2+9+1+4+1+5 =22, 2+2=4 இந்த நெம்பர் 4 தான். **K. RAMAN** என்கிற எண்ணிற்கு வசிய எண் நெம்பர் 4யை கவனித்தால் பலன்கள் தெரியவரும். அதே மாதிரியாக ஒவ்வொருவருடைய பெயர்களையும் கணிதரீதியாக செய்துபலன் பார்க்கவும். அப்படி உங்களுக்கு வசிய எண் தெரியாவிட்டால் எமக்குஎழுதவும். பூரூஆயுள் பலன் தெரியவேண்டுமானல் 14-அணு மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூலமாக அனுப்பினுல் விபரமான பூரூஆயுள் பலன் கிடைக்கும்.

கே. பி. வாசுதேவன்,
100, வேங்கடேஸ்வர காலனி,
(சயானி டாக்கீஸ் அருகில்)
அயனுவரம், சென்னை.

1
வெள்ளி - வீண்செலவு
சனி - பந்து தரிசனம்
ஞாயிறு - சகாயம்
திங்கள் - நட்பே துணை
செவ்வாய் - நற்செய்தி
புதன் - மாதர்நலம்
வியாழன் - உற்சாகம்

2
வெள்ளி - சஞ்சாரம்
சனி - அகால போஜனம்
ஞாயிறு : தொழில் அனுகூலம்
திங்கள் : கடன்வரவு
செவ்வாய் : புகழ்
புதன் . மனநிம்மதி
வியாழன் : சத்தியப்பேச்சு

3
வெள்ளி : சஞ்சலம்
சனி : கடன் உபத்திரவம்
ஞாயிறு : சகாயக்கவலை
திங்கள் : மந்தபுத்தி
செவ்வாய் : தீ விபத்து
புதன் : ஆரோக்கியக்குறைவு
வியாழன் : மனக்கஷ்டம்

4
வெள்ளி : முன் ஜாக்கிரதை
சனி : காரிய தடங்கல்
ஞாயிறு : மனஸ்தாபம்
திங்கள் ; சகோதர மேன்மை
செவ்வாய் : க்ஷேமலாப கீர்த்தி
புதன் : தெய்வ அனுகூலம்
வியாழன் ; வெற்றிகரமானநாள்

5
வெள்ளி : சிறந்தநாள்
சனி . சகலமும் சித்திபெறும்
ஞாயிறு : உல்லாச பிரயாணம்
திங்கள் : சந்தோஷம்
செவ்வாய் : மாதர்நலம்
புதன் : பணம் வரவு
வியாழன் : லிகித அனுகூலம்

6
வெள்ளி : பிரயாணம்
சனி ; நல்வரவு
ஞாயிறு : பணவசதி
திங்கள் , சந்தோஷம்
செவ்வாய் ; விஷஜந்து மூலம் கஷ்டம்
புதன் : உஷாராக இருக்கவும்
வியாழன் : நஷ்டம்

7
வெள்ளி : காலையில் நலம்
சனி : சும்மா இருக்கவும்
ஞாயிறு . சாதாரணநாள்
திங்கள் : மந்தபுத்தி
செவ்வாய் : தெய்வ அனுகூலம்
புதன் : வெற்றிகரமானநாள்
வியாழன் : பணவரவு

8
வெள்ளி : புகழ்
சனி . வெற்றிகரமானநாள்
ஞாயிறு : நண்பர் சகாயம்
திங்கள் : தொழில் மேன்மை
செவ்வாய் : லிகித அனுகூலம்
புதன் : கடன்வரவு
வியாழன் : சிறந்தநாள்

9
வெள்ளி : மந்தநாள்
சனி : சும்மா இருப்பதே நலம்
ஞாயிறு : பக்தி
திங்கள் . பணமுடை
செவ்வாய் . மனக்கவலை
புதன் : பந்துக்களின் தொந்திரவு
வியாழன் : சாதாரணநாள்

ரயில்வே மந்திரி ஸ்ரீ சந்தானத்துடன் ஸ்ரீ எஸ். ஏ. ரஹீம் போட்டியிடுவார்.

வரப்போகும் பொதுத்தேர்தலில் த[illegible] சைஜில்லாவின் ஒரு தொகுதியிலிருந்[illegible] யூனியன் பார்லிமெண்ட் தேர்தலுக்[illegible] தமிழ்நாடு விவசாயிகள் பஞ்சாயத்துத[illegible] வரும் பிரபலசோஷலிஸ்ட் ஊழியருமா[illegible] ஸ்ரீ எஸ். ஏ. ரஹீம் நிற்பார் என்று தெ[illegible]கிறது. ரயில்வேமந்திரிஸ்ரீ கே. சந்தான[illegible] நிற்கும் தொகுதியிலேயே ஸ்ரீ ரஹீமு[illegible] போட்டியிட வேண்டுமென்று சோஷ[illegible]ஸ்ட் கட்சியின் தலைவர்கள் யோசனை கூ[illegible]யிருப்பதாக பம்பாயிலிருந்து வெளி[illegible]கும் ஒரு ஆங்கிலதினசரிப் பத்திரிகையி[illegible] இச்செய்தி வெளியாகியிருக்கிறது.

உடுமலைப்பேட்டை.

உடுமலைப்பேட்டையிலிருந்து காங்கிர[illegible] தேர்தல்போர்டுக்கு சட்டசபைத் தேர்தலு[illegible]காக கீழ்க்கண்டவர்கள் மனுப்போடுவதாக தெரிகிறது: ஸ்ரீமான்கள் ஆர். வி. குருசா[illegible] நாயுடு, மௌனகுருசாமி நாயுடு, பி. ஜி. கோ[illegible]விந்தசாமி நாயுடு, எஸ். சுப்பேகவுண்டர் [illegible]யோர்கள். இவர்களில் பொதுஜன ஆத[illegible] யாருக்கிருக்கிறது என்பதை எழுதியனு[illegible]ஞல் பிரசுரிக்கப்படும்.

வாசியின் சிபார்சு என்ன?

பொள்ளாச்சி டவுன் தொகுதிக்கு ஸ்ரீ வி. கே. பழனிச்சாமிக்கவுண்டரும், ஸ்ரீ மகாலிங்கமும் காங்கிரஸ் தேர்தல்போர்[illegible]க்கு மனுப்போட்டுள்ளனர். இவர்களி[illegible] சட்டசபைக்கு யார்வேண்டும்? என்பதி[illegible] பொள்ளாச்சி வாசி ஆசிரியரின் சிபார்[illegible] என்ன?

(பி. ஆர். வாசுதேவன்.

பதில்:— யாருக்குப் பொதுஜன ஆ[illegible]ரவு அதிகம் இருக்கிறது என்பதைப்பொ[illegible]றுத்திருந்து பார்த்து தகுந்த, சரியான, நேர்மையானசிபார்சு செய்யப்படும்.

சந்தாதாரர்கள் கவனிக்க.

நமது வாசி சந்தாதாரர்களுக்கு சரிவரப் பேப்பர் கிடைப்பதில்லை என்ற புகார்கள் வருகின்றன சரியாகக் கிடைக்காதவர்கள் தங்கள் முழு விலாசத்தையும் நமது ஆபீஸி[illegible]ற்கு தெரியப்படுத்தினுல் தபால் மூலம் பேப்பர் அனுப்பப்படும். (மானேஜர்.)

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திர வாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன், எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும் செய்து கொடுக்கப்படும்.

உலகப் பிரசித்திபெற்ற பல்லடம்

உரிமையாளர்:

P. A. ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்ட்:

A. K. யாகூப் சாயபு,

பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி

உபயோகியுங்கள்.

சந்திரன் கமேஷ்ல் ஸ்கூல்,
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
ஒரு வருஷத்திவ் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. வுக்கும் 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.

தலைவர்:- S. R. Chandran

குறைந்த விலையில்
நம்பிக்கையான இடம்
K. ராமச்சந்திரன்,
பித்தளைப்பாத்திர வியாபாரம்
பெரியகடை வீதி,
கோவை

RAJA VENKATRAM GHEE STORES
PROP: V. C. ALAGIRISWAMY NAIDU
COIMBATORE.

அறிவிப்பு.

உறுதிக்கும் கீர்த்தியான வேலைப்பாட்டிற்கும்
சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு
சிமிட்டியை

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு
பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை,
பழனி
ஆகிய இடங்களில் கடைகள்
திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, பொள்ளாச்சி.

பொள்ளாச்சி பஜார்!

சுந்தரம் ஜுவல்லரி மார்ட் &
A. C. C. நீலகிரி பிராண்டு
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
S. நாகமாணிக்கம்செட்டியார் & பிரதர்,
போன் நெ. 85.
கடை வீதி & மார்கட் வீதி

மாடர்ன் கபே.
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

எனமல் & போட்டோ போர்டுகளுக்கு
M. முத்து, பெயிண்டிங் ஒர்க்ஸ்;
மரப்பேட்டை வீதி.

அறிவிப்பு.

பொள்ளாச்சி டவுனில் உள்ள எல்லா மாவுமில்களும் இனிமேல் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் விடுமுறை விடப்பட்டிருக்கிறது.

மாவுமில் சங்கத்தார்,
பொள்ளாச்சி.

கேள்வி—பதில்,

கே: வாள் முனையில் சாதிக்காததை வாலிப உலகு சாதிக்கும் என்கிறார்களே! அப்படியானால் வாலிப உலகு சாதிக்காததை எந்த உலகு சாதிக்கும்?

(எஸ். காமலாக்ஷி)

ப: உம் போன்ற வனிதையர் உலகு சாதிக்கும்

கே: வரும் தேர்தலில் எத்தகையவர்கள் அபேட்சகராக வரமுடியும்?

(பி. பீ. ஹரிஹரன்)

ப: உண்மையாக உழைப்பவர்களே அபேட்சகர்களாக வரமுடியும்.

கே: இன்றைய சினிமா உலகில் சிறந்த வசன கர்த்தாக்கள் யார்?

(சி. டி. பானு)

ப: இளங்கோவன், எஸ். டி. சுந்தரம், ஏ. டி. கிருஷ்ணசாமி, சுரதா, உதயகுமார்!

கே; காதல் எங்கே எப்படி ஏற்படுகிறது?

(அழகுமதி)

ப: ஸ்கூலுக்குப் போகும் வழி தண்ணீர்குழாயினருகில், பார்க்கில், மாத்தியேட்டரில், ரயிலில் ஏற்படுகி முதலில் கண் வீச்சு! பின் காதல்பே அதனால் பெரு ... மூச்சு!

கே: நம் இந்தியாவில் எதன் த்தி அதிகமாக இருக்கிறது? (முகம்

''. குழந்தை உற்பத்தி தான் கம்!

கே: அறிஞர்களாய் இருந்தும் வை இழந்தும், அரசர்களாய் இருந் நல்லாட்சி நடத்த தெரியாமலும், நீதி களாய் இருந்தும் நீதியிலிருந்து த யும், மந்திரிகளாய் இருந்தும் மதி இ தும், ஆராயத்திறன் படைத்தவர்க இருந்தும் ஆராயாமலும் மனிதன் ஒ ஆனால் ஜாதிவேறு மதம்வேறு, என் கடவுள் இல்லை என்றும் கூறும் சமு திற்கு ஏன் இந்த நிலை? (தி. சேர

ப: சமூகத்தில் பகுத்தறிவு, சீர் த்தம் என்று பேசும் பித்தலாட்டக்க ன்கள் அதிகம் முளைத்து விட்டத தான்!! அவைகளை அடியோடு கனை விட்டால் இந்த நிலையிருக்காது!

வெற்றிகரமாக நடைபெறுகிறது
கோவை கர்னடிக்கில்
ஐந்தாவது வாரம்
எனெஸ்கே பிலிம்ஸ்

மணமகள்

12-9-51 முதல்
பொள்ளாச்சி நாராயண டாக்கீஸில்
தினசரி மூன்று காட்சிகள்
நடைபெறுகிறது.

நடிகர்கள்
கிருஷ்ணன், மதுரம், பாலையா, சகஸ்ரநாமம்,
டி. பாலசுப்ரமணியம், லலிதா — பத்மினி,
பாண்டியன், புளிமூட்டை ராமசாமி

டைரெக்ஷன்:
என். எஸ். கிருஷ்ணன்

கோவை நீலகிரி ஜில்லாக்களுக்கு விநியோகஸ்தர்கள்:
கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட்,
கோயமுத்தூர்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi